# ஸம்ஸ்காரம்

**முன்னுரை:-** இந்த கட்டுரை, ப்ராமண ஸமூகத்தினர் கடைபிடிக்க வேண்டிய ஸம்ஸ்காரங்களைப் பற்றியது. ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராசாரிய ஸ்வாமிகளின் அருள்வாக்குகளை, “தெய்வத்தின் குரல்” என்ற பெயரில் வானதி பதிப்பகத்தினர், ஏழு பாகங்களாக (புத்தமாக) வெளியிட்டுள்ளனர். இதன் தொகுப்பாசிரியர் ஸ்ரீமான் ரா.கணபதி அவர்கள். இந்த கட்டுரை, தெய்வத்தின் குரல் இரண்டாம் பாகம், பக்கம் 783 லிருந்து 973 வரை உள்ள அருள்வாக்குகளை சுருக்கி தரப்பட்டுள்ளது. ஆகவே, ஆஸ்திக அன்பர்கள் இதைப் பற்றித் தெளிவாக தெரிந்து கொள்ளவோ அல்லது புரிந்து கொள்ளவோ, மேற்படி புத்தகத்தை படிக்க வேண்டுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறர்கள். மேலும், ஸ்ரீ ஸூரபி ஜகத்குரு சதாப்தி பப்ளிகேஷன்ஸாரல் 1994 ல் ஸ்ரீ S V ராதாக்ரிஷ்ன சாஸ்த்ரிகளை ஆசிரியராகக்கொண்டு ப்ரசுகரிக்கப்பட்ட “தர்மசாஸ்த்ர ஸங்க்ரஹம்” என்ற நூலும் இதற்கு உதவியாக எளிதாக இருக்கும்.

************************************

**ஸம்ஸ்காரம் என்பதன் பொருள்:-** “ஸம்” என்றால் நன்றாக என்று அர்த்தம். “காரம்” என்றால் ஆக்குவது. “ஒன்றை நன்றாக ஆக்குவதே ஸம்ஸ்காரம்” என்பது பொதுவான அர்த்தம். அனேக கார்யங்கள் பண்ணி ஒருவன் ஆத்மவித்தாக வேண்டும். குணத்தினாலும் சரீரத்தினாலும் ஒன்றையொன்று பரிசுத்தி செய்து கொள்ளும் முறையில் கர்மா செய்ய வேண்டும். இப்படிப்பட்ட கர்பாவிற்க்கே “ஸம்ஸ்காரம்” என்று பெயர்.

நம்முடைய ஆத்மாவானது இந்திரிய சலனங்களால் சிக்கலாகி உள்ளது. சிக்கலை எடுத்து எப்பொழுதும் ஆனந்தமாக இருக்கச் செய்ய பல தடைகளிருக்கின்றன. எப்பொழுதும் ஆனந்தமாக இருக்க ஜீவனை ப்ரம்ம லோகத்தில் கொண்டு போய் சேர்க்க வேண்டும். அந்த ஈஸ்வர ஸந்நிதானத்தில் சேர்த்துவிட்டால் துன்பமே இராது.

ஒரு ஜீவனைப் பரமாத்மாவிடம் சேர்க்கிற அளவுக்கு நன்றாக சுத்தப்படுத்திகிற ஸம்ஸ்காரங்களையே, தர்ம சாஸ்திரங்கள் நமக்கு விஷேமாகச் சொல்கின்றன. நாம் நல்ல கதியை அடைய கல்ப

ஸூத்ரங்களில் சொன்னதை அனுசரித்து செய்ய வேண்டிய நாற்பது ஸம்ஸ்காரங்களை விரிவாக தர்ம சாஸ்திரங்களில் இருந்து அறியலாம்.

கர்மத்தை செய்து குணத்தை செம்மைப்படுத்த இந்த கர்ம பூமியைத் (பாரத தேசம்) தவிர, இதர பூமிகளில் ஸாத்தியமில்லை. இக் கர்மாக்களை யோகமாகச்செய்தால் ஜீவன் முக்தியை அடையலாம்.

ஒரு கர்மாவை செய்ய அதற்குக் கால, தேசக் கட்டுப்பாடு உண்டு. சிரார்த்தம் செய்வதற்கு என்று ஒரு காலம் உண்டு. அதேபோல் கர்மா செய்ய வேண்டிய தேசம் என்று ஒன்று இருக்கிறது. அந்தக் கர்மாவை புண்ணிய பூமியில்தான் பண்ண வேண்டும். முக்கியமாக பாரத வர்ஷத்தில் (தேசத்தில்) வைதீக கர்மாக்கள் பண்ணப்பட வேண்டும். இந்த தேசத்திலும் சில காலங்கள்/ இடங்கள் நிஷித்தமானவை. பரிசுத்த இடத்தில், பரிசுத்த காலத்தில் கர்மாக்களைப் பண்ண வேண்டும்.

இதற்குத்தான் நாற்பது ஸம்ஸ்காரங்கள், எட்டு ஆத்ம குணங்களையும் ரிஷிகள் சொல்லியிருக்கிறார்கள்.

தடித்தனம், அஹங்காரம் குறையக் குறையத்தான் ஆசை, துவேஷம், பயம், துக்கம் முதலியவைகளை அடக்கிக் உத்தம குணங்களிலிருந்து நழுவாமல் இருக்க முடியும். ஸம்ஸ்காரங்களும், ஸத்குணங்களும் ஒன்றோடோன்று சேர்ந்து வருகின்றன.

**அஷ்ட குணங்கள்:-**

1. தயை : ஸர்வபூதங்களிடமும் அன்பாக இருப்பது.
2. சாந்தி : கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்வது.
3. அநஸீயை : பொறாமையின்மை.
4. சௌசம் : சுத்தம்.
5. அநாயாஸம் : கஷ்டப்படாமல் இருப்பது.
6. மங்கலம் : ஆனந்தம்.
7. அகார்ப்பண்யம் : தர்ம சிந்தனை.
8. அஸ்ப்ருஹா : பற்றின்மை, ஆசையின்மை.

**ஸம்ஸ்காரங்களின் பெயர்கள்:-**

1. கர்ப்பாதானம்.
2. பும்ஸவனம்.
3. ஸீமந்தம்.

4. ஜாத கர்மா.
5. நாம கர்மா.
6. அன்ன ப்ராசனம்.
7. உபநயனம்.
8. குருகுல வாஸத்தில் செய்ய வேண்டிய பிராஜாபத்யம் முதலிய நான்கு (4) வேத விரதங்கள்.
9. வேத விரதங்கள் முடிந்ததும் செய்கிற ஸ்னானம்.
10. விவாஹம்.
11. இதன் பின் கிரஹஸ்தன் செய்ய வேண்டிய ஐந்து (5) நித்ய கர்மமாக்களாகிய:- 1. பிரம்ம யஜ்ஞும், 2. தேவ யஜ்ஞும், 3.பித்ரு யஜ்ஞும், 4. மனுஷ்ய யஜ்ஞும், 5. பூத யஜ்ஞும் என்பவை. **(ஆக மொத்தம் 19.)**

**இதனுடன் கிருஹஸ்தன் செய்ய வேண்டிய பாக யக்ஞ்ங்கள் ஏழு (7).**

1. அஷ்டகை (அன்வஷ்டகை).
2. ஸ்தாலீபாகம்.
3. பார்வணம்.
4. ஸ்ராவணி,
5. ஆக்ரஹாயணி.
6. சைத்ரி.
7. ஆஸ்வயுஜி.

**ஹவிர் யக்ஞங்கள் ஏழு (7):-**

1. அக்னியாதானம்.
2. அக்னிஹோத்ரம்.
3. தர்ச பூர்ணமாஸம்.
4. ஆக்ரேயணம்.
5. சாதுர்மாஸ்யம்.
6. நிடேபசுபந்தம்.
7. ஸௌத்ராமணி.

**ஸோம யக்ஞ்யங்கள் ஏழு (7):-**

1.அக்னிஷ்டோமம்.

2 அத்யக்னிஷ்டோமம்.

3. உக்த்யம்.
4. ஷோடசி
5. வாஜபேயம்.
6. அதிராத்ரம்.
7. அப்தோர்யாமம். **(ஆக மொத்தம்-21)**

**தினமும் செய்ய வேண்டிய ஸம்ஸ்காரங்கள்:-**

1. ப்ரஹ்ம யஜ்ஞும் : வேதம் ஒதுவ்து.
2. தேவ யஜ்ஞும் : யாகமும் பூஜையும்.
3. பித்ரு யஜ்ஞும் : தர்ப்பணம்.
4. மநுஷ்ய யஜ்ஞும் : விருந்தோம்பல்.
5. பூத யஜ்ஞும் : ஜீவ ஜந்துகளுக்கு பலி போடுவது.
6. ஔபாஸனம், :நாற்பது ஸம்ஸ்காரங்களில், ஏழு பாக யஜ்ஞுங்களில் சேராத ஒரு பாக யஜ்ஞும்.
7. அக்னி ஹோத்ரம் : இது ஏழு ஹவிர் யஜ்ஞும்களில் ஒன்று.

**பக்ஷித்திற்கு ஓர் முறை செய்ய வேண்டிய ஸம்ஸ்காரங்கள்:-**

1. தர்ச பூர்ண மாஸம் : இது ஓர் ஹவிர் யஜ்ஞும்.
2. ஸ்தாலீபாகம் :

**மாதத்திற்கு ஓர் முறை செய்ய வேண்டிய ஸம்ஸ்காரங்கள்:-**

1. பார்வணீ சிராத்தம்

**ஸம்வத்ஸ்ரத்துக்கு (வருடத்திற்கு) ஒரு முறையோ அல்லது, ஜன்மத்தில் ஒரு முறையோ செய்ய வேண்டியவை.**

1. மற்ற ஐந்து ஹவிர் யஜ்ஞுங்கள், ஏழு ஸோம யஜ்ஞுங்க்கள்.
2. பிரதமைகளில் செய்யும் ஸ்தாலீபாகம்
3. கஷ்டமான ஸோம யாகங்களை ஜன்மாவில் ஒரு முறை பண்ணிணால் போதும்.